கலந்து, அவருடைய அனுமதியைப் பெற்று, மேச்சேரியில் ஒரு பணிமனையை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 97 பேருந்துகளைக் கொண்டு அந்தப் பணிமனை இயங்கிக் கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். மேலும், அங்கே இட நெருக்கடி இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். போக்குவரத்துத் துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, அருகிலுள்ள பணிமனைகளிலிருந்து எத்தனை பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்பதையும் கணக்கிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மேச்சேரியில் பணிமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 250, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

250—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***2072—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிருவாகத்தின் மூலமாக திருச்செந்தூர் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜுன் 29]

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருச்செந்தூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் பட்டயக் கல்விக்கான 12 தொழில்நுட்பக் கல்லூரிகள், 11 பொறியியல் கல்லூரிகள், 5 மருத்துவம் சார்ந்த கல்லூரிகள் உள்ளன. இப்பகுதியில் அமைந்துள்ள பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை குறைந்து காலியிடங்கள் அதிகமாக உள்ளன. இந்தச் சூழ்நிலையில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிருவாகத்தின் மூலமாகப் புதிதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

முற்பகல் 11-15

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத்தினுடைய தலைவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், எங்கள் கழகத்தினுடைய செயல் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் தளபதியார் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்த காலத்தில், அறநிலையத் துறையின் அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய அண்ணன் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களும், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் அறங்காவலர் குழு தலைவராக மரியாதைக்குரிய அண்ணன் தேவதாஸ் சுந்தரம் அவர்களும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான, திருச்செந்தூரிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இராணி மஹராஜபுரம் என்ற ஊரில் 64 ஏக்கர் நிலத்தை அடையாளம் கண்டு, அதிலே பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்கான ஆய்வுகளையெல்லாம் செய்தார்கள். அந்தத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கான ஆய்வுகளைச் செய்தது மட்டுமல்லாமல், அறநிலையத்துறையிலிருந்து 5 இலட்சம் ரூபாயை பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்கு இருப்புத் தொகையாகவும் செலுத்தப்பட்டது.*

அந்தவகையிலே அந்தப் பகுதியிலுள்ள இளைஞர்கள் அந்த பலவகை தொழில்நுட்பக் கல்லூரியின்மூலம் பயன் பெறுவதற்கு, இன்றைக்கு பழனியிலுள்ள அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயில் மூலமாக எப்படி கல்லூரிகள் அமைத்து அந்தப் பகுதி மக்கள் பயன்பெறுகின்றார்களோ அந்தவகையிலே இந்தக் கல்லூரி அமைவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, ஆவன செய்வார்களா என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15-2-2011 அன்று அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் சாத்தியக்கூறுகளை சரியாக ஆய்வு செய்யாமல், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி பலவகை தொழில்நுட்பக் கல்லூரி என்ற பெயரில் கல்லூரி தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. பல்வேறு ஆய்வுகள் செய்து, மீண்டும் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ததில், பல்வேறு பாடப் பிரிவுகளில் மாணவர்கள் சேர்க்கையை ஆய்வு செய்ததில் பலவகை தொழில்நுட்பப் படிப்பைக் காட்டிலும், கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்பில் மாணவர்களுக்கு அதிக ஆர்வம் உள்ளதாக அறியப்பட்டது. திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பாக திருச்செந்தூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்குச் சாத்தியம் இல்லை என்று திருக்கோயில் நிருவாகம் கருதியது. எனவே, திருக்கோயில் நிருவாகம் சார்பில் புதிதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கினால் மாணவர்கள் சேர்க்கை மிகவும் குறைவாக இருக்க சாத்தியக்கூறுகள் உள்ளதால் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிருவாகம் சார்பில் புதிதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க சாத்தியமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

2018 ஜூன் 29]

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூரில் பல்வேறு கல்லூரிகள் உள்ளன. ஆனாலும், இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், அந்தப் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அந்தப் பகுதியிலே ஆரம்பிக்கப்பட்டால் இளைஞர்கள் பலர் வேலைவாய்ப்புகளை பெறக்கூடிய சூழ்நிலை கண்டிப்பாக ஏற்படும். ஆய்வு செய்தவர்கள் எந்தவகையிலே ஆய்வு செய்தார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, கண்டிப்பாக அந்தப் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிருவாகத்தின் சார்பாக அமைத்துத் தரவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன். அது மட்டுமல்லாமல், இன்றைக்கு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் கிரிவலப் பிரகாரத்தைச் சுற்றி கட்டப்பட்டிருக்கும் கட்டடம் 1974-லே, சான்டோ சின்னப்பா தேவர் அவர்களால் கட்டித் தரப்பட்டது. அதை அருமையாகக் கட்டித் தந்தார்கள். அது கடற்பகுதியாக இருந்ததன் காரணமாக, அந்தக் கட்டடத்தில் கடற்காற்று பட்டதன் காரணமாக இடிந்து விழுந்து யாதவர் சமுதாயத்தைச் சார்ந்த ஒரு பெண்ணும், தாயும் இறந்தார்கள். இறந்த பின்பு அதை ஆய்வு செய்கின்றபோது, அந்தச் சுற்றுப்பிரகாரத்தை இடிக்க வேண்டுமென்ற வகையிலே அதை இடித்துவிட்டார்கள். அதனை இடித்துவிட்டார்கள் என்று சொன்னாலும், அந்தப் பகுதியிலே கோயிலைச் சுற்றிச் செல்ல வேண்டுமென்று சொன்னால், பக்தர்கள் வெயிலிலே தவிக்கின்ற நிலையும், மழை வந்தால் ஒதுங்க முடியாத நிலையும், அதுபோல, நேர்த்திக்கடனாக அவர்கள் படுத்து அங்கபிரதட்சணம் செய்ய முடியாத நிலையும் இருப்பதால் அவை இன்றைக்கு முழுவதுமாக தடுக்கப்பட்டிருக்கின்றது. திருக்கோயில் நிருவாகம் அந்தப் பிரகாரத்தைக் கட்டிக் கொடுப்பதாக இருந்தாலும் அதை கருங்கல் மூலம்தான் கட்ட வேண்டும். ஏனென்று சொன்னால் கடற்கரை பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அதைக் கருங்கல்மூலம் கட்டினால்தான் எந்தவகையிலும் பாதிப்பு ஏற்படாமல் இருக்கும். எனவே, அதைக் கட்டித் தருவதற்கு அரசும், அறநிலையத் துறையும் முயற்சி செய்யுமா, கல்லூரியை எங்களுக்கு கட்டித் தருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2018 ஜுன் 29*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் தொடங்க அகில இந்திய தொழில்நுட்பக் கவுன்சில் அனுமதி வழங்க மறுத்துவிட்டது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான ஒப்புதல் பெற்று, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிருவாகம் மூலமாக, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க மீண்டும் சாத்தியக்கூறுகளை ஆராயும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த சுற்றுப்பிரகாரச் சுவர், கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பாக கடலின் சீற்றத்தாலும், கடல் உப்பு மற்றும் மண் அரிப்பினாலும் முழுவதும் இடிந்து விழுந்த நிலையில் உள்ளது. அங்கே இடிபாடுகளில் சிக்கியவர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று, 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், அந்தச் சுற்றுப்பிரகாரத்தை பழைய நிலையிலேயே பழமை மாறாமல், கல் கட்டடம் கட்டுவதற்கு ஏற்கெனவே மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று, அந்தப் பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

பட்டியல் 8@

1—

காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம்

வினா எண் 754—திரு. க. சுந்தர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

@ இப்பட்டியலிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.